கனம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

2026–ம் வருடம் பிப்ரவரி மாதம் 03ம் தேதி செவ்வாய்கிழமை
இடைநிலை மனு எண்.5/2025
இன்
அசல் வழக்கு எண்.320/2022
* * * *

1) வரதராஜன்
2) நாராயணசாமி ... 1, 2 மனுதாரர்கள்/1, 2 எதிர்கோரிக்கை வாதிகள்/ 1, 2 பிரதிவாதிகள்

/எதிர்/

1) சுரேஷ் கண்ணன்
2) சந்திரா
3) சாந்தா
4) மகாலெட்சுமி
5) தேவிகா ... 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 5 எதிர்கோரிக்கை பிரதிவாதிகள்/1 முதல் 5 வாதிகள்

இறுதியாக இம்மனுவானது 20.01.2026ல் இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது 1, 2 மனுதாரர்கள்/1, 2

எதிர்கோரிக்கை வாதிகள்/1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.வசந்தகுமார் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/1 முதல் 5 எதிர்கோரிக்கை பிரதிவாதிகள்/1 முதல் 5 வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.G.அழகர்சாமி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளுக்கு போதிய வாய்ப்பளித்தும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

## உத்தரவு

இம்மனுவானது 1, 2 மனுதாரர்கள்/1, 2 எதிர்கோரிக்கை வாதிகள்/ 1, 2 பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்கோரிக்கை வழக்குரையில் வழக்குரை, குறுந்தலைப்பு, நெடுந்தலைப்பு, முகவரி, கோரிக்கை போன்றவற்றில் உரிய திருத்தங்கள் செய்யவேண்டி இம்மனுவானது கட்டளை 6 விதி 17ன் மற்றும் பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 1. மனுவின் சுருக்கம்:–

1.1) அசல் வழக்கானது தாவாச்சொத்தான 5 செண்ட்

வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்யக்கோரியும், அதனை தொடர்ந்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக்கோரியும் இந்நிர் பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்நிலையில், இந்நிர் பிரதிவாதிகள் தங்களின் எதிர்வழக்குரையுடன், பாலம்மாள் அவர்களின் தான ஆவணம் மூலம் தங்கள் கோவிலுக்கு பாத்தியப்பட்ட தாவாச்சொத்தில் மேல்புற 2 1/2 சென்ட் பாகத்திற்கு எதிர்பாத்தியம் கோரி எதிர்க்கோரிக்கை தாக்கல் செய்திருந்ததாகவும், மேலும், மேற்படி எதிர்க்கோரிக்கை வழக்குரையில், வழக்குரை, குறுந்தலைப்பு, நெடுந்தலைப்பு, முகவரி, கோரிக்கை போன்றவற்றில் உரிய திருத்தங்கள் செய்யவேண்டி இம்மனுவானது இம்மனுவானது 1, 2 மனுதாரர்கள்/1, 2 எதிர்கோரிக்கை வாதிகள்/1, 2 பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக இந்நிர் இடைநிலை மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2.1) 1ம் எதிர்மனுதாரர்/1ம் எதிர்கோரிக்கை பிரதிவாதி/1ம் வாதி தாக்கல் செய்துள்ள எதிருரையை 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் ஒத்துக்கொண்டுள்ளார்கள். மேற்படி 1ம் எதிர்மனுதாரர்/1ம் எதிர்க்கோரிக்கை பிரதிவாதி/1ம் வாதி தரப்பில் தாக்கல்

செய்யப்பட்டுள்ள எதிருரையில், மனுதாரர்கள் திருத்தல் மனு உரிய முறையில் திருத்தம் செய்வதற்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றும், வழக்குரையில் 3,4 பிரதிவாதிகளாக கோவிந்தசாமி, பாலகிருஷ்ணன் என்பவர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றும், ஆனால் இந்த நபர்களை மனுவில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்பதால் இந்நிர் மனுவானது தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றும், மனுதாரர் வேண்டுமென்றே முறையாக மனு தாக்கல் செய்யாமல் இருந்ததற்கான காரணமே அசல் வழக்கில் அவர்களுக்கு எவ்வித எதிர்வியாஜ்ஜியமும் இல்லை என்றும், அதனால் மேற்படி மனுதாரர்கள்/1,2 எதிர்கோரிக்கை வாதிகள்/பிரதிவாதிகள் தரப்பு இந்நிர் இடைநிலை மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், மனுதாரர்கள்/1,2 எதிர்கோரிக்கை வாதிகள்/பிரதிவாதிகள் தங்களது தரப்பு இந்நிர் இடைநிலை மனுவினை நிரூபணம் செய்யும்பொருட்டு கீழ்க்கண்ட மாண்பமை இந்திய உச்சநீதிமன்ற முன்தீர்ப்பினை முன்னிலைப்படுத்தியுள்ளார்கள்.

**Ashok kumar kalra**
**Vs.,**
**Wing CDR. Surendra Agnihotri and others**
**SLP(Civil) No.23599/2018**
**dated:19.11.2019**

**3) தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதேயாகும்.**

இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் யாவும் இந்நீதிமன்றத்தால் முறையாக பரிசீலனை செய்யப்பட்டது. மேலும் இந்நிர் அசல் வழக்கானது 2022 ஆண்டு முதல் நிலுவையில் இருந்து வரும் நிலையில், இம்மனுவானது இந்நிர் மனுதாரர்கள்/1,2 எதிர்கோரிக்கை வாதிகள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்க்கோரிக்கை வழக்குரை, வழக்குரையின் குறுந்தலைப்பு, நெடுந்தலைப்பு, முகவரி மற்றும் கோரிக்கை போன்றவற்றில் உரிய சீர்திருத்தங்களை செய்ய வேண்டும் என்று கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3.1) இந்நிலையில், இந்த இடைநிலை மனுவில் இந்நிர் மனுதாரர்கள்/1,2 எதிர்கோரிக்கை வாதிகள்/பிரதிவாதிகள் தரப்பில் கோரியுள்ள பரிகாரத்தை குறித்து பரிசீலனை செய்கையில், தாவாச்சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்யக்கோரியும், அதன்தொடர்ச்சியாக வாதிகள் தாவாச்சொத்தினை அனுபவத்து வருவதில் பிரதிவாதிகளோ, அவரது வகையாட்களோ

எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி 1ம் எதிர்மனுதாரர்/1ம் எதிர்கோரிக்கை பிரதிவாதி/1ம் வாதியால், இந்நிர் மனுதாரர்கள்/1,2 எதிர்கோரிக்கை வாதிகள்/பிரதிவாதிகளுக்கு எதிராக அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்கள்/1,2 எதிர்கோரிக்கை வாதிகள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்க்கோரிக்கை வழக்குரையில், வழக்குரை, குறுந்தலைப்பு, நெடுந்தலைப்பு, முகவரி, கோரிக்கை போன்றவற்றில் உரிய திருத்தங்கள் செய்ய வேண்டி மனுதாரர்கள்/1, 2 எதிர்கோரிக்கை வாதிகள்/பிரதிவாதிகள் கோரியுள்ள பரிகாரமானது சட்டப்படியானது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. மேலும், எதிர்க்கோரிக்கை சம்பந்தமான வழக்கு விபரம் எதுவும் மனுதாரர்கள்/1, 2 எதிர்கோரிக்கை வாதிகள்/ பிரதிவாதிகளால் மாற்றப்படவில்லை. மாறாக, எதிர்க்கோரிக்கையின் நடைமுறை சம்பந்தமான சீர்திருத்தங்கள் மட்டுமே மேற்படி மனுதாரர்கள்/1, 2 எதிர்கோரிக்கை வாதிகள்/ பிரதிவாதிகள் கோரும் சீர்திருத்தங்கள் உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

3.2) மேலும், வழக்குத்தரப்பினர்களுக்கு இடையே உள்ள பிரச்சனையை முழுமையாக தீர்வு காண்பதற்கு மேற்படி சீர்திருத்தங்கள் அவசியமானதாகவே இருக்கும் என்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. மேலும், மேற்படி சீர்திருத்த மனுவில் கண்டுள்ளவாறு சீர்திருத்தம் செய்யும்பட்சத்தில் தரப்பினர்களுக்கு எவருக்கும் பாதகமோ சாதகமோ ஏற்படாது என்பதை கருத்தில்கொண்டும், தரப்பினர்களுக்கு இடையே பல வழக்குகள் தாக்கல் செய்வதை தவிர்க்கும்விதமாகவே மேற்படி சீர்திருத்தங்களானது இருப்பதால் மேற்படி சீர்திருத்தங்கள் அவசியமானது மற்றும் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும். எனவே, மனுதாரர்கள்/1, 2 எதிர்கோரிக்கை வாதிகள்/ பிரதிவாதிகளின் மனுவில் கண்டவாறு அசல் வழக்கின் எதிர்க்கோரிக்கையில் சீர்திருத்தங்கள் செய்வது சட்டப்படியானதாகவே இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**முடிவாக,** மனுதாரர்கள்/1, 2 எதிர்கோரிக்கை வாதிகள்/ பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவானது அனுமதித்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த திறந்த நீதிமன்ற அவையில் 2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 03ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

**இணைப்பு:** –

**சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இருதரப்பிலும் தாக்கல்** – இல்லை.

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.5/2025
இன்
அசல் வழக்கு எண்.320/2022
வரைவு/செவ்வை உத்தரவு
நாள்: 03.02.2026